(Under Section 173 BNSS)

FIRST INFORMATION REPORT
முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8120349

1. District : மாவட்டம் திருப்பூர் | PS: கா.நி.கா.மாவு காவல்நிலையம் | Year: 2025 ஆண்டு | FIR No.: 07 மு.த.அ. எண் | Date: 27.06.25 நாள்

2. (i) Act சட்டம்: Prevention of Corruption Act Amended Act-2018 | Sections பிரிவுகள்: Sec. 7
(ii) Act சட்டம்: | Sections பிரிவுகள்:
(iii) Act சட்டம்: BNSS | Sections பிரிவுகள்: Sec. 106
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் 27.06.25 | Date from : நாள் முதல் 18.00 | Date to : நாள் வரை 21.30
Time Period : நேர அளவு | Time from : நேரம் முதல் | Time to : நேரம் வரை
(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 27.06.25 | Time : நேரம் 22.30
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் | Time : நேரம் 23.00

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக எழுத்து மூலமாக

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் சுமார் 60 km வடக்கில்
Beat Number : முறைக் காவல் எண் | (b) Address : முகவரி சார் பதிவாளர் அலுவலகம், பல்லடம்.
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் | District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் பூ.தீர்த்தராமன் | (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர்
(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு | (d) Nationality : நாட்டினம் | (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : வழங்கப்பட்ட நாள் | Place of Issue : வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : தொழில் | (g) Address : முகவரி ஆய்வாக்குழு ஆய்வாளர், மாவட்ட ஆய்வக அலுவலகம், கோபி.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்) 1) திரு. V. S. தினகரன். சார்பதிவாளர், பல்லடம் சார் பதிவாளர் – அலுவலகம். 2) திரு. காசிராஜ் கேயன் த/பெ. அண்ணாச்சாமி. அலுவக உதவியாளர், 3) திருமதி. S. சாண்ட்ரோஸ்மி. க/பெ. சந்தோ. மேட்டர எல்ட்ரி அபரேட்டர், 4) திருமதி. M. அதிர்யா. க/பெ-S ராஜாராஜேஸ்வரன் மேல்னையாளர் நாகர்கள். அலுவலம் மாவட்டம் 5) புகார்தாரர் 1@ மணிராஜ் த/பெ. ஏலுமலை எ. 1/139, மேட்டுத்தோட்டம், சாலைமலை கிராமம் எல்லைப்பட்டி, பல்லடம் வட்டம் மற்றும் திருப்பூர் மாவட்டம்.

8. Reasons for delay in reporting by the complainant / Informant: குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

— தாமதமில்லை —

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

—

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

—

அம்மா. தனித்தாளில் இணைக்கப்பட்டுள்ளது.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..... Rank ..... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.....on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

27/06/2025

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

27/06/25

Signature of the Officer-in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name: பெயர் ..... G. அழகேசன்.
Rank: நிலை .....No. எண் .....
காவல் தலை காவலர்/பெண்
பா.மு.க பாப.
உலகேஸ்வரம்.

பணிந்து அனுப்பப்படுகிறது, அம்மையீர், நான் இன்று 27.06.2025-ம் தேதி இரவு 22.30 மணியளவில், நிலைய அலுவலில் இருந்தபோது கடலூர் மாவட்ட ஆய்வுக்குழு ஆய்வாளர் பூ.சீத்தாராமன் என்பவர் கொடுத்த புகார் மனுவை பெற்று இன்று 27.06.2025-ம் தேதி 23.00 மணிக்கு, விழுப்புரம் ஊ.த.க பிரிவு குற்ற எண் 07/2025/AC/VPM u/s 7 of The Prevention of Corruption Act, 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act 2018 r/w 106 BNSS-ன்படி வழக்கு பதிவு செய்யப்பட்டது. அனுப்புநர்:பூ.சீத்தாராமன், ஆய்வுக்குழு ஆய்வாளர், மாவட்ட ஆய்வு குழு அலுவலகம், கடலூர். பெறுநர்: காவல் துணை கண்காணிப்பாளர் அவர்கள், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, விழுப்புரம் மாவட்டம். ந.க.எண்.ஆ/455/2025, நாள்.27.06.2025. ஐயா, பொருள்: திடீர் ஆய்வு - விழுப்புரம் மாவட்டம் - வளத்தி சார்பதிவாளர் அலுவலகம் - 27.06.2025 அன்று விழுப்புரம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் துணைக் கண்காணிப்பாளர் அவர்களுடன் திடீர் ஆய்வு மேற்கொண்டது - புகார் அளித்தல் - தொடர்பாக:- பார்வை: திடீர் ஆய்வு மகஜர் நாள்: 27.06.2025. இன்று 27.06.2025 ஆம் தேதி திரு.பூ.சீத்தாராமன், ஆய்வுக்குழு ஆய்வாளர், மாவட்ட ஆய்வுக்குழு அலுவலகம், கடலூர் ஆகிய நான் எனது அலுவலகத்தில் பணியில் இருந்தபோது விழுப்புரம் மாவட்டம், வளத்தி சார்பதிவாளர் அலுவலகத்தில் பத்திர பதிவுக்கு வரும் பொது மக்களிடம் ஆவண எழுத்தர்கள் மூலமும், புரோக்கர்கள் மூலமும் இலஞ்சம் பெறுவதாக எனக்கு கிடைத்த நம்பகமான தகவலின் அடிப்படையில் நான் விழுப்புரம் ஊழல் தடுப்பு கண்காணிப்பு பிரிவுக்கு சென்று அங்கு பணியில் இருந்த திரு.Gஅழகேசன், காவல் துணை கண்காணிப்பாளர், விழுப்புரம் அவர்களிடம், வளத்தி சார்பதிவாளர் அலுவலகத்தை திடீராய்வு செய்வது குறித்து கலந்தாலோசித்து அதன்படி நானும் ஊழல் தடுப்பு கண்காணிப்பு பிரிவு காவல் குழுவினரும் உடனடியாக இரண்டு வாகனங்களில் புறப்பட்டு சுமார் 17.00 மணியளவில் வளத்தி சார்பதிவாளர் அலுவலக முன்பு வந்தபோது TN 09 BH 8748 என்ற பதிவு எண் கொண்ட பல்சர் இருசக்கர வாகனத்தில் அடையாளம் தெரிந்த பெயர் தெரியாத ஆண் நபர் ஓட்ட அவருக்கு பின்னால் வளத்தி சார்பதிவாளர் திரு.V.S.முருகன் அவர்கள் ஆரஞ்ச் கலர் கொண்ட One Way Bag - இனை வலது பக்க தோளில் மாட்டி கொண்டு அமர்ந்து வளத்தி சார் பதிவாளர் அலுவலகத்திலிருந்து செஞ்சி நோக்கி சுமார் 4 கிலோ மீட்டர் தொலைவு சென்றவர்களை நிறுத்தி அவர்களிடம் எங்களை அறிமுகப்படுத்திக் கொண்டு அவர்களிடம் அலுவலகத்தை திடீராய்வு செய்யப்போவதாக தெரிவித்துவிட்டு பின்னர், விசாரணை செய்தபோது மேற்படி வளத்தி சார்பதிவாளர் திரு.V.S.முருகன் அவர்கள் பணிமுடித்து செல்வதாக கூறினார். பிறகு அவரை சந்தேகத்தின் பேரில் அவர்

வைத்திருந்த ஆரஞ் கலர் One Way Bag-இனை சோதனை செய்தபோது பேக்கின் உள்ளே 500 ரூபாய் தாள்கள் கொண்ட இரண்டு கட்டுகள் இருந்தன. மேற்படி இருசக்கர வாகனத்தினை ஓட்டி வந்த நபரை விசாரிக்க அவர் தனது பெயர் மணிரத்தினம் த.பெ.ஏழமலை, நெ.1/139,மேட்டு தெரு, சாத்தாம்பாடி கிராமம், மேல்மலையனூர் தாலுக்கா, விழுப்புரம் மாவட்டம் என்றும் தான் வளத்தி சார் பதிவாளர் அலுவலகம் முன்பு Browsing Centre வைத்து இருப்பதாகவும் சார் பதிவாளர் திரு.முருகன் அவர்களை செஞ்சி பஸ் நிறுத்தம் வரை அழைத்து சென்று விட்டு வருவதற்காக எனது இருசக்கர வாகனத்தில் அழைத்து வந்ததாக கூறினார். சந்தேகத்தின் பேரில் அவரை சோதனை செய்ய அவர் அணிந்திருந்த பேண்டின் இடது பக்க பாக்கெட்டில் 500 ரூபாய் நோட்டு ஒரு கட்டும் மற்றும் 100 ரூபாய் தாள்களும் இருந்தன. அந்த இடமானது பொது மக்கள் அதிகம் வந்து செல்வதாக இருந்ததாலும் விசாரணை செய்ய போதுமான இடவசதி இல்லாததாலும் மேற்படி இரண்டு நபர்களையும் வாகனத்தில் அழைத்துக்கொண்டு வளத்தி சார்பதிவாளர் அலுவலகத்திற்கு சுமார் 18.00 மணியளவில் அழைத்து வரப்பட்டது. அலுவலகத்தினுள் சென்று அங்கிருந்தவர்களிடமும் எங்களை அறிமுகப்படுத்திக் கொண்டு அவர்களிடம் அலுவலகத்தை திடீராய்வு செய்யப்போவதாக தெரிவித்துவிட்டு பின்னர், அவர்கள் முன்னிலையில் எங்களை சுய பரிசோதனை செய்த பின்பு மேற்படி அலுவலகத்தில் உள்ளவர்களையும், அலுவலகத்தையும் சோதனை செய்தபோது, பின்னர் 1) திரு.V.S.முருகன், சார்பதிவாளர், வளத்தி சார்பதிவாளர் அலுவலகம், அவர்களை தெற்கு நோக்கி போடப்பட்டிருந்த நாற்காலியில் அமர வைக்கப்பட்டது. 2) சார்பதிவாளருக்கு முன்னாள் இருசக்கர வானத்தினை ஓட்டி வந்த திரு.மணிரத்தினம் என்பவரை நாற்காலியில் அமர வைக்கப்பட்டது. சார் பதிவாளருக்கு வலது பக்கத்தில் இருந்த நாற்காலியில் 3) அலுவலக உதவியாளர் திரு.A.கார்த்திக்கேயன் அமர்ந்திருந்தார். சார் பதிவாளர் இருக்கைக்கு முன் பக்கத்தில் இருந்த நாற்காலியில் 4) டேட்டா என்ட்ரி ஆபரேட்டர் திருமதி. சாமுண்டீஸ்வரி க.பெ. சதீஷ் என்பவர் அமர்ந்திருந்தார். 5)அலுவலக கேமரா ஆபரேட்டர் திருமதி.வித்யா க.பெ. ராதாகிருஷ்ணன் என்பவர் சார்பதிவாளருக்கு வலது புறம் உள்ள கணினி அறையில் கிழக்கு நோக்கியவாறு போடப்பட்டிருந்த நாற்காலியில் அமர்ந்திருந்தார். சார்பதிவாளர் இருக்கைக்கு நேர்எதிரே தனிநபரான 6) திரு.பரதன் த.பெ. விஜயக்குமார், எண்.2, மேல்மலையனூர் ரோடு, வளத்தி கிராமம், செஞ்சி தாலுக்கா, விழுப்புரம் மாவட்டம் என்பவர் நின்றிருந்தார். அதன் பிறகு நான், மேற்படி நபர்களை அவரவர்கள் இடத்தில் இருக்கும்படி அறிவுறுத்தினேன். பின்னர் எனது அறிவுறுத்தலின்படி காவல் குழுவினர்

மேற்படி அலுவலகத்தையும், அங்கிருந்தவர்களையும் சோதனை செய்தபோது கீழ்கண்டவகையில் கணக்கில் வராத தொகை கைப்பற்றப்பட்டது.

திடீராய்வின்போது கைப்பற்றப்பட்ட கணக்கில் வராத ரொக்கப் பணம் விவரம்:

1) வளத்தி சார்பதிவாளர் அலுவலகத்தில் திரு.V.S.முருகன், சார்பதிவாளர், வளத்தி சார்பதிவாளர் அலுவலகம் அவர்களை சோதனை செய்தபோது அவரது ஆரஞ்ச் கலர் One Way Bag-ல் உள்ளே ரூ.1,16,000/- (500X232) இருந்தது. ஆனால் இவ்வலுவலகத்தில் பராமரிக்கப்பட்டு வரும் தனி நபர் ரொக்கப்பதிவேட்டுடன் ஒப்பீடு செய்து பார்க்க அதில் ரூபாய்.710/- என குறிப்பிடப்பட்டு இருந்தது. இது முன்னுக்குபின் முரணாக இருந்ததால் மேற்படி தொகை விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. 2) அலுவலக உதவியாளர் திரு..கார்த்திக்கேயன் த.பெ.அருணாச்சலம் என்பவரை சோதனை செய்தபோது அவரிடம் ரூபாய்.5,600/- (500X10, 200X2, 100X2) இருந்தது. அப்பணத்தினை இவ்வலுவலகத்தில் பராமரிக்கப்பட்டு வரும் தனி நபர் ரொக்கப்பதிவேட்டுடன் ஒப்பீடு செய்து பார்க்க அதில் ரூபாய்.450/- என குறிப்பிடப்பட்டு இருந்தது. இது முன்னுக்குபின் முரணாக இருந்ததால் மேற்படி தொகை விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. 3) டேட்டா என்ட்ரி ஆபரேட்டர் திருமதி. S.சாமுண்டீஸ்வரி க.பெ. சதீஷ் என்பவரை சோதனை செய்தபோது அவரிடம் ரூபாய்.3,900/- (500X5,200X4,100X6) இருந்தது. அப்பணத்தினை இவ்வலுவலகத்தில் பராமரிக்கப்பட்டு வரும் தனி நபர் ரொக்கப்பதிவேட்டுடன் ஒப்பீடு செய்து பார்க்க அவாது பெயருக்கு எதிரே வெற்றிடமாக இருந்தது. இது முன்னுக்குபின் முரணாக இருந்ததால் மேற்படி தொகை விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. 4) கேமரா ஆபரேட்டர் திருமதி.ரா.வித்யா, க.பெ.ராதாகிருஷ்ணன் என்பவரை சோதனை செய்தபோது அவரிடம் ரூபாய்.1,800/- (500X3,200X1,100X1) இருந்தது. அப்பணத்தினை இவ்வலுவலகத்தில் பராமரிக்கப்பட்டு வரும் தனி நபர் ரொக்கப்பதிவேட்டுடன் ஒப்பீடு செய்து பார்க்க அவாது பெயருக்கு எதிரே வெற்றிடமாக இருந்தது. இது முன்னுக்குபின் முரணாக இருந்ததால் மேற்படி தொகை விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. 5) புரோக்கர் திரு.மணிரத்தினம் த.பெ. ஏழுமலை என்பவரை சோதனை செய்தபோது அவரிடம் ரூபாய்.60,500/- (500X113,100X40) இருந்தது. மேற்படி தொகை குறித்து அவரிடம் கேட்க அவர் எந்தவித முகாந்திரமும் தெரிவிக்காததால் மேற்படி தொகை விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. 6) உரிமம் பெறாத ஆவண எழுத்தர் திரு.பாதன் த.பெ. விஜயக்குமார் என்பவரை சோதனை செய்தபோது அவரிடம் ரூபாய்.29,400/- (500X58,100X4) இருந்தது. மேற்படி தொகை குறித்து அவரிடம் கேட்க அவர் எந்தவித முகாந்திரமும் தெரிவிக்காததால் மேற்படி தொகை விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. அதன் பின்பு, மேலும் வளத்தி சார்பதிவாளர் அலுவலகத்தின் உட்புறத்தினை சோதனை செய்ததில்

கைப்பற்றக்கூடிய பொருளோ, பணமோ ஏதும் இல்லை. வளத்தி சார்பதிவாளர் அலுவலகத்தின் உட்புறத்தினை சோதனை செய்தபோது கைப்பற்றப்பட்ட பணமானது

வ.எண்	கைப்பற்றப்பட்ட பணம்
1)	ரூ.1,16,000/-
2)	ரூ.5,600/-
3)	ரூ. 3.900/-
4)	ரூ. 1,800/-
5)	ரூ. 60.500/-
6)	ரூ. 29,400/-
ஆக மொத்தம்	**ரூ.2,17,200/-**

இந்த திடீராய்வின்போது, வளத்தி சார்பதிவாளர் அலுவலகத்தின் உட்புறத்தினை சோதனை செய்தபோது கைப்பற்றப்பட்ட கணக்கில் வராத தொகையான **ரூ.2,17,200/-** (ரூபாய் இரண்டு லட்சத்து பதினேழாயிரத்து இருநூறு மட்டும்) ஆனது பத்திரப்பதிவுக்கு வரும் பொதுமக்களிடம் இருந்து இலஞ்சமாக பெற்ற பணமாக இருக்கக்கூடும் என விசாரணையில் தெரிய வருவதால் மேற்படி தொகையினை மேல் விசாரணைக்காக கைப்பற்றினேன். பின்பு அலுவலத்தில் இருந்த பதிவேடுகளான G கணக்குப் பதிவேடு, மற்றும் H கணக்குப் பதிவேடு, ஆகியவற்றை பார்வையிட்ட போது பதிவேடுகளில் குறிப்பிட்டுள்ள தொகைகள் அனைத்தும் ஆன்லைன் மூலம் பெறப்பட்டுள்ளது. ரொக்கமாக எந்த தொகையும் இவ்வலுவலகத்தில் பெறப்படவில்லை. மேலும் விசாரணைக்காக வளத்தி சார்பதிவாளர் அலுவலக வருகைப்பதிவேடு-2025, தனி நபர் ரொக்க பதிவேடு-2025, வருகை பதிவேட்டின் தணிக்கை பதிவேடு-2025, தாமத வருகைப்பதிவேடு-2025, ஒளிப்படக்கருவி இயக்குநர் மற்றும் கணிணி உள்ளீட்டு பணியாளர் வருகை பதிவேடு-2025 மற்றும் இயக்கப்பதிவேடு-2025 ஆகியவை விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது.இது சம்மந்தமாக சம்மந்தப்பட்ட அலுவலர்களான 1)திரு.V.S.முருகன், சார்பதிவாளர், வளத்தி சார்பதிவாளர் அலுவலகம், 2)திரு..கார்த்திக்கேயன் த.பெ.அருணாச்சலம், அலுவலக உதவியாளர் 3) திருமதி. S.சாமுண்டீஸ்வரி க.பெ. சதீஷ், டேட்டா என்ட்ரி ஆபரேட்டர் 4)திருமதி.ரா.வித்யா,க.பெ.ராதாகிருஷ்ணன்,கேமரா ஆபரேட்டர் 5) புரோக்கர் திரு.மணிரத்தினம் த.பெ. ஏழுமலை, நெ.1/139,மேட்டு தெரு, சாத்தாம்பாடி கிராமம், மேல்மலையனூர் தாலுக்கா, விழுப்புரம் மாவட்டம் 6) உரிமம் பெறாத ஆவண எழுத்தர் திரு.பரதன் த.பெ. விஜயக்குமார். எண்.2, மேல்மலையனூர் ரோடு, வளத்தி கிராமம், செஞ்சி தாலுக்கா, விழுப்புரம் மாவட்டம் ஆகியோர்கள் மீது உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமாய் கேட்டுக்கொள்ளப்படுகிறது.தங்கள் உண்மையுள்ள, sd (xxxxxx) ஆய்வுக்குழு ஆய்வாளர்,மாவட்ட ஆய்வு குழு அலுவலகம், கடலூர். இணைப்பு:1.திடீர் ஆய்வு மகஜர் நாள். 27.06.2025. 2.ரொக்கம் ரூபாய். **ரூ.2,17,200/-** 3. 6 நபர்களின்

வாக்குமூலங்கள் .4.வளத்தி சார்பதிவாளர் அலுவலக வருகைப்பதிவேடு-2025, 5.தனி நபர் ரொக்க பதிவேடு-2025, 6.வருகை பதிவேட்டின் தணிக்கை பதிவேடு-2025, 7.தாமத வருகைப்பதிவேடு-2025 மற்றும் 8.ஒளிபடக்கருவி இயக்குநர் மற்றும் கணினி உள்ளீட்டு பணியாளர் வருகை பதிவேடு-2025 மற்றும் 9. இயக்கப்பதிவேடு-2025.

Madam,

Received the above computer typed complaint on 27.06.2025 at about 22.30 hrs. Hence, I registered a case in Villupuram Vigilance and Anti-Corruption Cr.No.07/2025/AC/VPM u/s 7 of The Prevention of Corruption Act, 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act 2018 r/w 106 BNSS at 23.00 hrs today on 27.06.2025.

The original FIR along with the original computer typed complaint in a sealed cover are sent to the Special Judge for cases under The Prevention of Corruption Act, Villupuram and a copy of FIR is submitted to the Director of Vigilance and Anti-Corruption, Chennai.

27/06/2025

(G.Arageşan)
Deput Superintendent of Police,
Vigilance and Anti-Corruption,
Villupuram.